பிரஸார் பாரதி

அகில இந்திய வானொலி, சென்னை- 4

12. 10. 2024 7. 15

சனிக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. சென்னை அருகே ரயில் தடம்புரண்டதை அடுத்து, ரயில் பாதையை சீரமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

2. ரயில் விபத்து குறித்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே பொது மேலாளர் திரு. ஆர்.பி. சிங் தெரிவித்துள்ளார்.

3. விஜயதசமி இன்று கொண்டாடப்படுவதை ஒட்டி நாட்டு மக்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்துகள் தெரிவித்துள்ளார்.

4. கேரளாவில் 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

5. நியூசிலாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

<u>*---- இனி விரிவான செய்திகள் ---*</u>

<<<<>>>>

சென்னை அருகே ரயில் தடம்புரண்டதை அடுத்து, ரயில் பாதையை சீரமைக்கும் பணிகள் முழுவீச்சில் நடைபெற்று வருகின்றன.

மைசூரில் இருந்து பீஹார் மாநிலம் தர்பங்கா நோக்கி சென்றுகொண்டிருந்த **Bagmati** விரைவு ரயில் நேற்றிரவு கும்மிடிப்பூண்டி அருகே கவரைப்பேட்டையில் நின்றுகொண்டிருந்த சரக்கு ரயில் மீது மோதி தடம்புரண்டது.

இதனால் சுமார் 13 பெட்டிகள் தடம்புரண்டது. இந்த விபத்தில் காயமடைந்தவர்களுக்கு அருகில் உள்ள மருத்துவமனைகளில் சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த தகவல் அறிந்து தேசிய பேரிடர் மீட்புப் படையினர் அப்பகுதிக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

மாவட்ட ஆட்சியர் விபத்து நடந்த பகுதிக்கு விரைந்து சென்று மீட்பு மற்றும் அவசரகால ஏற்பாடுகளை செய்தார்.

ரயில் விபத்தால் சென்னை – கும்மிடிப்பூண்டி மார்க்கத்தில் இரு வழிகளிலும் போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

விபத்துக்குள்ளான மைசூரு – தர்பங்கா **Bagmati** விரைவு ரயில் பயணிகள் தொடர்ந்து பயணத்தை மேற்கொள்ள மாற்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

இந்த விபத்தையடுத்து, தெற்கு ரயில்வேயின் சென்னை வட்டாரம் அவசர உதவி எண்களை அறிவித்துள்ளது.

044 – 2 5 3 5 4 1 5 1 மற்றும்

044 – 2 4 3 5 5 9 9 5

விபத்து நடந்த இடத்தில் முழுவீச்சில் சீரமைப்புப் பணிகள் நடைபெற்று வருவதாக விபத்து நடத்த இடத்தைப் பார்வையிட்ட பின்னர் செய்தியாளர்களிடம் பேசிய தெற்கு ரயில்வே தலைமைப் பொதுமேலாளர் திரு. ஆர்.பி. சிங் கூறினார்.

மெயின் லைனில் பயணிகள் ரயில் செல்ல சிக்னல் அளிக்கப்பட்டிருந்ததாகவும், ஆனால் அந்த ரயில், லூப் லயினுக்கு தடம் மாறியதால் விபத்து ஏற்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

இந்த விபத்தல் உயிரிழப்புகள் ஏதும் ஏற்படவில்லை என்றும் அவர் கூறினார்.

விபத்து குறித்து உயர்மட்ட விசாரணைக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

விபத்து குறித்து அதிர்ச்சி தெரிவித்துள்ள முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின், அமைச்சர் திரு. நாசர் மற்றும் திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் ஆகியோர் விபத்து நடந்த இடத்திற்கு விரைந்து சென்று மீட்புப் பணிகளை மேற்கொள்ள உத்தரவிட்டார்.

பயணிகளுக்குத் தேவையான உணவு மற்றும் அவர்கள் ஊர்திரும்ப உரிய ஏற்பாடுகளை செய்ய தனியாக குழு ஒன்று அமைக்கப்பட்டுள்ளதாகவும் சமூக வலைப்பதிவில் அவர் தெரிவித்துள்ளார்.

விபத்துக்குள்ளான இடத்தில் ரயில் பெட்டிகளை அகற்றி போக்குவரத்தை சீரமைக்கும் பணி விரைவாக நடைபெற்று வருவதாக திருவள்ளூர் மாவட்ட ஆட்சியர் திரு. பிரபுசங்கர் கூறினார்.

(வாய்ஸ் பைட் - பிரபுசங்கர் - 22 நொடிகள்)

இந்நிலையில் விபத்தில் காயமடைந்து திருவள்ளூர் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருபவர்களை துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் நேரில் சந்தித்து ஆறுதல் கூறினார்.

<<<<>>>>

ரயில் விபத்தையடுத்து, சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து இன்று புறப்படும் 18 ரயில்கள் ரத்து செய்யப்பட்டுள்ளன.

பல ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன.

திருப்பதியில் இருந்து – புதுச்சேரி செல்லும் ரயில், இரு மார்க்கத்திலும் இன்று ரத்து செய்யப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து திருப்பதி செல்லும் விரைவு ரயில்கள் அனைத்தும் இரு மார்க்கத்திலும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

அரக்கோணத்தில் இருந்து புதுச்சேரி செல்லும் ரயிலும், கடப்பாவில் இருந்து அரக்கோணம் செல்லும் ரயிலும் ரத்து செய்யப்பட்டுள்ளன.

விஜயவாடாவில் இருந்து சென்னை சென்ட்ரலுக்கு வருகை தரும் பினாக்கினி எக்ஸ்பிரஸ் ரயிலும் இரு மார்க்கத்திலும் ரத்து செய்யப்பட்டுள்ளது.

சூலூர்பேட்டை – நெல்லூர் இடையே இயக்கப்படும் மின்சார ரயிலும் இரு மார்க்கத்திலும் ரத்து செய்யப்பட்டுள்ளதாக தெற்கு ரயில்வே செய்திக்குறிப்பு தெரிவிக்கிறது.

விபத்து காரணமாக சில ரயில்கள் மாற்றுப் பாதையில் திருப்பி விடப்பட்டுள்ளன.

தில்லியில் இருந்து சென்னை வரும் தமிழ்நாடு விரைவு ரயில் கூடூரில் இருந்து ரேணிகுண்டா, அரக்கோணம் மார்கமாக திருப்பி விடப்பட்டுள்ளது.

லக்னோவில் இருந்து சென்னை வரும் விரைவு ரயில் நாயுடுப்பேட்டை மற்றும் சூலூர்பேட்டை ரயில் நிலையத்தில் நிற்காமல் ரேணிகுண்டா – அரக்கோணம் வழியாக திருப்பிவிடப்பட்டுள்ளது.

ஹவுரா சத்ரகாச்சியில் இருந்து சென்னை சென்ட்ரல் வரும் சிறப்பு ரயில் கூடூரில் இருந்து ரேணிகுண்டா – அரக்கோணம் வழியாக திருப்பிவிடப்பட்டுள்ளது.

ராஜஸ்தான் மாநிலம் **Bhagat Ki Kothi**-யில் இருந்து மன்னார்குடி செல்லும் விரைவு ரயிலும், கூடூரில் இருந்து ரேணிகுண்டா – அரக்கோணம் வழியாக திருப்பிவிடப்பட்டுள்ளது.

விசாகப்பட்டிணம் - சென்னை சென்ட்ரல் அதிவிரைவு சிறப்பு ரயில், புவனேஸ்வர் - ராமேஸ்வரம் அதிவிரைவு ரயில், ஹைதராபாத் - சென்னை சென்ட்ரல் விரைவு ரயில், எர்ணாகுளம் - **Barauni Rapti Sagar** விரைவு ரயில் ஈரோடு – சாம்பல்புர் விரைவு ரயில், தனப்பூர் - பெங்களூரு விரைவு ரயில், சென்னை சென்ட்ரல் - அகமதாபாத் நவ்ஜீவன் எக்ஸ்பிரஸ் உட்பட பல ரயில்கள் அரக்கோணம் - ரேண்குண்டா வழியாக செல்லும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

சென்னை சென்ட்ரல் ரயில் நிலையத்தில் இருந்து மேற்குவங்க மாநிலம் ஷாலிமார் செல்லும் கோரமண்டல் விரைவு ரயில் இன்று காலை 7 மணிக்கு புறப்பட்டு செல்வதற்கு பதிலாக 2 மணி நேரம் தாமதமாக 9 மணிக்கு புறப்பட்டு அரக்கோணம் - ரேணிகுண்டா வழியாக செல்லும் என்று தெற்கு ரயில்வே அறிவித்துள்ளது.

<<<<>>>>

பிரதமரின் இலவச சூரிய மின்திட்டத்தை செயல்படுத்துவதற்கான வழிகாட்டுதல்களை மத்திய புதிய மற்றும் புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் வெளியிட்டுள்ளது.

வீடுகளிலும், வணிக நிறுவனங்களின் கூரைகளிலும் சூரிய மின்சக்தி சாதனங்கள் பொருத்துவதை ஊக்கப்படுத்துவதற்காக 500 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்கள் மற்றும் சேமிப்புடன் கூடிய மின்கலம் ஆகிய வளர்ந்து வரும் தொழில்நுட்பங்களில் கவனம் செலுத்தவும் புத்தொழில் நிறுவனங்கள் மற்றும் கல்வி நிறுவனங்கள் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளன.

தொழில் மற்றும் கல்வி நிறுவனங்கள் இத்திட்டத்தின்கீழ் புதுமையான பொருட்களை உருவாக்கும்போது அவற்றில் தேர்ந்தெடுக்கப்படும் பொருட்களுக்கு திட்ட செலவில் 60 சதவீதம் வரை அல்லது 30 கோடி ரூபாய் வரை இவற்றில் எது குறைவோ நிதியுதவி செய்யப்படும் என்றும் மத்திய புதுப்பிக்கத்தக்க எரிசக்தி அமைச்சகம் அறிவித்துள்ளது.

<<<<>>>>

விஜயதசமி பண்டிகை நாடு முழுவதும் இன்று கொண்டாடப்படுகிறது.

ராவணனை, ராமன் வெற்றிகொண்டதைக் குறிக்கும் வகையில் இந்த நாள் வட மாநிலங்களில் கொண்டாடப்படுகிறது.

ஒன்பது நாள் நவராத்திரி மற்றும் துர்காபூஜை நிறைவடையும் நாளாகவும் இன்று கொண்டாடப்படுகிறது.

விஜயதசமியை முன்னிட்டு நாட்டு மக்களுக்கு குடியரசுத்தலைவர் திருமதி திரௌபதி முர்மு வாழ்த்துகள் தெரிவித்துள்ளார்.

அநீதிக்கு எதிரான நீதியின் வெற்றியைக் குறிக்கும் நாள், இந்நாள் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

கண்ணியம், கடமைக்கான அர்ப்பணிப்பு, நடத்தையில் தூய்மை, பணிவு மற்றும் நீதிக்கான துணிச்சலான போராட்டத்தை எழுச்சியூட்டும் பல கதைகளுடன் இந்நாள் தொடர்புடையது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

விஜயதசமி பண்டிகை நாட்டு மக்கள் அனைவருக்கும் வெற்றி, செழிப்பு மற்றும் மகிழ்ச்சியை கொண்டுவரட்டும் என்றும் அவர் கூறியுள்ளார்.

விஜயதசமியை முன்னிட்டு நாக்பூரில் இன்று ஆர்.எஸ்.எஸ். சார்பில் ஆண்டுக் கொண்டாட்டத்திற்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இந்த நிகழ்ச்சியில் இஸ்ரோ முன்னாள் தலைவர் திரு. கே. ராதாகிருஷ்ணன் கலந்துகொண்டு சிரப்புரையாற்ற உள்ளார்.

ஆர்.எஸ்.எஸ். தலைவர் திரு. மோகன் பகவத், மத்திய அமைச்சர்கள் திரு. நிதின் கட்கரி, திரு. அஷ்வினி வைஷ்ணவ் ஆகியோரும் இந்த விழாவில் பங்கேற்கிறார்கள்.

இந்நாளை முன்னிட்டு நாக்பூரில் ஆர்.எஸ்.எஸ். தொண்டர்களின் அணிவகுப்பிற்கும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

<<<<>>>>

கேரளாவில் 5 மாவட்டங்களில் இன்று கனமழை பெய்யும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளதால் முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

திருவனந்தபுரம், கொல்லம், கோட்டயம், எர்ணாகுளம், திருச்சூர் ஆகிய மாவட்டங்களில் கனமழை பெய்யும் என்பதால் அங்கு ஆரஞ்சு எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கன்னூர், காசர்கோடு மாவட்டங்களில் மஞ்சள் எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

கனமழை எச்சரிக்கையைத் தொடர்ந்து ஆற்றின் கரையோரங்களில் வசிக்கும் மக்கள் பாதுகாப்பான இடங்களுக்குச் செல்லுமாறு மாநில பேரிடர் மேலாண்மை ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

நிலச்சரிவு ஏற்படும் ஆபத்துள்ள பகுதி மக்கள் பாதுகாப்பான இடங்களுக்கு மாற்றப்பட்டு வருவதாகவும் அந்த ஆணையம் கூறியுள்ளது.

இந்நிலையில் மத்திய நீர்வள ஆணையம் கோட்டயம் மாவட்டத்தில் உள்ள மணிமாலா ஆற்றில் வெள்ளப்பெருக்கு ஏற்படும் என்று எச்சரித்துள்ளது.

<<<<>>>>

நியூசிலாந்து அணிக்கு எதிரான 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாட உள்ள இந்திய அணி அறிவிக்கப்பட்டுள்ளது.

பங்களாதேஷுக்கு எதிரான டெஸ்ட் தொடரில் விளையாடி வரும் இந்திய அணியில் இடம்பெற்றுள்ள யாஷ் தயாலை தவிர்த்து மற்ற அனைவரும் இந்த அணியில் இடம்பெற்றுள்ளனர்.

இரு அணிகளுக்கு இடையேயான முதலாவது டெஸ்ட் போட்டி வரும் 16ஆம் தேதி பெங்களூருவில் தொடங்கவுள்ளது.

இரண்டாவது போட்டி இம்மாதம் 24ஆம் தேதி புனேயிலும், 3வது மற்றும் கடைசி போட்டி அடுத்த மாதம் ஒன்றாம் தேதி மும்பையிலும் நடைபெற உள்ளது.

<<<<>>>>

இந்தியா – பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான 3வது மற்றும் கடைசி ட்வெண்ட்டி ட்வெண்ட்டி கிரிக்கெட் போட்டி இன்று ஹைதராபாதில் நடைபெற உள்ளது.

இந்தப் போட்டி இரவு ஏழு மணிக்கு தொடங்க உள்ளது. 3 போட்டிகள் கொண்ட தொடரில் ஏற்கனவே இந்தியா முதல் 2 போட்டிகளில் வெற்றி பெற்று 2-0 என்ற புள்ளிக் கணக்கில் தொடரைக் கைப்பற்றியது.

**<<<<The End>>>>**